[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) சங்கரன்கோவில் முனிசிபாலிட்டி பள்ளிக் கட்டிட உரிமை யாளர் நடவடிக்கையால் மாணவர்கள் பாதிப்பு.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த வேதனையோடு ஒரு முக்கியமான தகவலை இந்த மன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் இருக்கின்ற சங்கரன்கோவில் முனிசிபாலிட்டிக்கு பாத்தியப்பட்ட (குறுக்கீடு) பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் நானும் கிளப்பிக்கொண்டு இருக் கிறேன்.

திரு. கு. ரமணி: பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் முதலிலேயே அனுமதி கேட்டார், அனுமதி கொடுத்து அவரைப் பேச அனுமதித்து இருக்கிறேன். நீங்கள் முதலிலேயே அனுமதி கேட்க வில்லை, ஆகவே உங்களுக்கு அனுமதி இல்லை. (கூச்சல்—குழப்பம்)

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் முனிசிபாலிட்டிக்கு பாத்தியப்பட்ட ஒரு நடுநிலைப் பள்ளியில் சங்கரன்கோவில் முனிசிபாலிட்டி உறுப்பினர் ஒருவர் அந்தக் கட்டிடம் தனக்கு வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அரசுக்கு பாத்தியப்பட்ட அந்தக் கட்டிடத்தினுடைய கூரையைக் கிழித்து எறிந்து இருக் கிறார். அந்தக் கட்டிடத்தில் இருக்கின்ற 318 மாணவர்களும், 13 ஆசிரியர்களும் . . . (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் பேசுவதை இடைமறிக்காதீர்கள். அமருங்கள். (குறுக்கீடு) திரு. வேங்கட ரமணன் அவர்களும் உறுப்பினர் தான். அவர் பேசி முடிக் கட்டும். ஆகவே எல்லோரும் அமருங்கள். (கூச்சல்—குழப்பம்)

1987 ஏப்ரல் 11]

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, சங்கரன்கோவில் முனிசிபாலிட்டி பள்ளியில் அந்தப் பள்ளிக் கட்டிடத்தினுடைய உரிமையாளர் வாடகை மாதம் 220 ரூபாய் பெற்றுக் கொண்டும், அவரே அந்த நகாசபையின் உறுப்பினராக இருந்தாலும் கூட 318 மாணவர்கள், 13 ஆசிரியர் கள் வேலை பார்க்கின்ற அந்தக் கட்டிடத்தினுடைய கூரையை கிழித்து எறிந்து அந்த மாணவர்களை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்து 8-வது வகுப்புப் பரிட்சையை எல்லாம் கொளுத்தும் வெய்யிலில் அந்தக் கூரை இல்லாத கட்டிடத்தில் எழுதும்படி அவர் செய்து இருக்கிறார். ஆனால் அந்த முனிசிபாலிட்டி தலைவரும் அவர் தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் நடவடிக்கை எடுக்காமல் இன்றைக்கு அரசு அந்தப் பள்ளிக் கூடத்தை எடுத்துக்கொண்டு இருக்கிற காரணத்தால் உடனடி யாக அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய ஆவலாக இருக்கிறேன். இதற்கு எழுத்து மூலமாகவும் புகார் கொடுக்க நான் தயாராக இருக் கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து நீதியைப் பெற்றுத் தருவார்களா என்று நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து தகவல் என்னிடம் இல்லை. அதைப்பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் (குறுக் கீடு, கூச்சல்—குழப்பம்)

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. என் இவ்வளவு பேர்? உங்களிடம் ஏற்கனவே நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு, கூச்சல்) யாருக்கும் அனுமதி கிடையாது. (குறுக்கீடு) அனுமதி இல்லை. (குறுக்கீடு) இருக்கட்டும், எதுவாக இருந்தாலும் அனுமதி இல்லை. இன்றைக்கு அனுமதி கிடையாது (குறுக்கீடு) யாருக்குமே அனுமதி கிடையாது, திரு. வேங்கடரமணனைத் தவிர.

TRUTH ALONE TRIUMPHS